# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்திவெளியீட்டு எண்.01/2021 நாள்.06.01.2021

## செய்திக்குறிப்பு

2019-2020-ஆம் ஆண்டிற்கான கால்நடை உதவி மருத்துவர் பதவிக்கான காலிப்பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும்பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், 18.11.2019 நாளிட்ட அறிவிக்கையின் வாயிலாக விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டது.

மேற்காணும் பதவிக்கான நேர்முகத்தேர்வு 04.01.2021 முதல் 29.01.2021 வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசால் 28.01.2021 அன்று பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளதால், 28.01.2021 அன்று திட்டமிடப்பட்ட நேர்முகத்தேர்வு 29.01.2021 மற்றும் 30.01.2021 ஆகிய நாட்களுக்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அழைப்பாணை விவரம் (Notice of Interview) தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 28.01.2021 அன்று நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும், மேற்படி தேதி மாற்றப்பட்ட அழைப்பாணையினை தேர்வாணையத்தின் இணையதளத்திலிருந்து (www.tnpsc.gov.in) பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். நேர்முகத் தேர்விற்கான அழைப்பாணையினை தேர்வாணைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு குறுஞ்செய்தியும், மின்னஞ்சலும் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அழைக்கப்பட்டோர் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நாட்களில் நேர்முகத் தேர்வில் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

ஒதுக்கப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளத் தவறும் விண்ணப்பதாரர்களுக்கு மறு வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்றும் அவர்கள் அடுத்தகட்ட தெரிவு நிலைக்கு தகுதியானவர்களாக கருதப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

செயலாளர்.

**TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION**

**Press Release No: 01/2021** **Date: 06.01.2021**

**PRESS RELEASE**

Tamil Nadu Public Service Commission in its notification dated 18.11.2019 had invited applications from eligible candidates for appointment by direct recruitment to the post of Veterinary Assistant Surgeon in Tamil Nadu Animal Husbandry Service for the year 2019-2020. Interview for the said post is scheduled to be held from 04.01.2021 to 29.01.2021. As the Government had declared 28.01.2021 as public holiday, the Interview scheduled to be conducted on 28.01.2021 has been rescheduled on 29.01.2021 and 30.01.2021.

The Notice of Interview mentioning the rescheduled date and time is hosted in the Commission's website (www.tnpsc.gov.in). The candidates are informed through SMS and E-mail to download the Notice of Interview dated 06.01.2021 from the Commission's Website.

Candidates failing to appear for Oral Test on the rescheduled dates will not be given any further chance to appear for the same and they will not be considered for further selection process.

Secretary